[1986 ஏப்ரல் 25

(ஆ) முடிவடைந்த நிலையத்தில் என்ன வசதிகள் இருக்கும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) திருச்சி பேருந்து நிலைய பணி நடப்பு 1985—86–ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு அடுத்த ஆண்டில் முடிக்கப்படும்.

(ஆ) முழுவதும் கட்டி முடிக்கப்பட்ட பின், அப்பேருந்து நிலையம், 34 கடைகள், ஒரு உணவு விடுதி, 20 தங்கும் அறைகள் மற்றும் 17 பேருந்துகள் ஒரே நேரத்தில் நிறுத்தவும், பயணிகள் நிற்கவும் ஆகிய வசதிகள் கொண்டதாக இருக்கும்.

(முற்பகல் 9–30)

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு திருச்சிபேருந்து நிலையம் சென்னைக்கு வருகின்றவர்களுக்கு மத்தியிலே இருக்கின்ற காரணத்தால், அதிகமான நெருக்கடியுள்ள பேருந்து நிலையமாக இருக்கிறது. அங்கே கழிப்பறை வசதி ஒழுங்காக இல்லாத காரணத்தினால், பயணிகள் அதிகம் இன்னலுற வேண்டியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்தில் கழிப்பறைகள் பற்றி குறிப்பிடவில்லை. அதைப்பற்றிய விவரம் ஏதாவது இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அந்த வசதி செய்து தரப்படும்.

திரு. டி.ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அந்த வசதி செய்து தரப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அப்படியென்றால், அதற்கு திருத்திய மதிப்பீடு பெற்றுதான் அந்த வேலை மேற்கொள்ளப்படுமா? அல்லது இந்தத் திட்டத்திலேயே அதுவும் சேர்க்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற மதிப்பீட்டில் சேர்ந்திருக்க வேண்டும். இல்லையென்றால், திருத்திய மதிப்பீடு பெற வேண்டுமென்றால், மீண்டும் அது பெறப்பட்டு, அந்த வசதி நிச்சயமாக செய்து தரப்படும் என்ற உறுதியை அளிக்கின்றேன்.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே இருக்கின்ற மக்களுக்கு தமிழக அரசின் சாதனைகள், மற்றும் தமிழகத்திலுள்ள நல்ல திட்டங்களை யெல்லாம் அரசு அறிவிக்கின்றது. மற்றும் பல செய்திகளை மக்கள் கண்டு களிக்க வேண்டுமென்று அரசு தொலைக்காட்சி வசதிகளைச் செய்திருக்கிறது. இந்த தொலைக்காட்சி பெட்டிகளை ....

(குறுக்கீடு)

1986 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அளவில்தான் உறுப்பினர் அவர்களிடம் விவரம் இருக்கிறது. அடுத்தகேள்வி

தலை ஞாயிறு பேரூராட்சியில் சாலைப் பணிகள்.

557—(*வினா எண் 6296)—திரு. மா. மீனாட்சிசுந்தரம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைஞாயிறின் நான்கு வீதிகளையும் தார்ச்சாலையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம், தலை ஞாயிறு பேரூராட்சியில் உள்ள நான்கு வீதிகளையும் தார்ச்சாலையாக மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தலைஞாயிறின் நான்கு வீதிகளில் வடக்கு வீதி சாலையில் ஒரு பகுதியும், மேலவீதி சாலையும் நெடுஞ்சாலை துறையினரின் பராமரிப்பில் உள்ளது. நெடுஞ்சாலை துறையினரால் மேற்கண்ட இரண்டு சாலைகளும் தார்ச் சாலைகளாக மாற்றப்பட்டு விட்டன. தலைஞாயிறு பேரூராட்சியின் பராமரிப்பில் உள்ள வடக்கு வீதி மற்றும் கீழ் வீதி ஆகியவற்றில் தார்ச்சாலை அமைக்கும் பணி ஏற்கனவே முடிவடைந்துவிட்டது. தெற்கு வீதியில் கப்பி பரப்பும் வேலை தற்போது முடிவடைந்து உள்ளது. தார் போடும் வேலை விரைவில் முடிவடைந்துவிடும்.

திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தலைஞாயிறு பேரூராட்சியில் தார்ச் சாலை ஒரு வீதியில்தான் போடப்பட்டிருக்கிறது. மற்ற வீதிகளில் போடப்பட்டிருப்பதாக தெரியவில்லை. இருந்தாலும், சென்ற ஆண்டு பெய்த மழையால் தலைஞாயிறு, வேதாரண்யம் பகுதிகளிலுள்ள கிராமச் சாலைகள் மிகவும் சீர் கேடடைந்து, இன்னும் சீர் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றன. ஏனென்றால், பஞ்சாயத்துக்களிலும், பஞ்சாயத்து ஒன்றியங்களிலும் நிதிநிலை பற்றாக் குறை இருக்கிறது. எனவே, உடனடியாக அரசு ஏதாவது நிதி உதவி செய்து, அந்த ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் சாலைகள் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தலைஞாயிறு பேரூராட்சியில் உள்ள நான்கு வீதிகளில் மூன்றிற்கு தார்ச் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன என்ற தகவல் தரப்பட்டிருக்கின்றது. தெற்கு வீதிக்கு மட்டும் கப்பி பரப்பப்பட்டிருக்கின்றது என்றும், தார்ச் சாலை போடப் பட இருக்கின்றது என்ற விவரத்தைச் சொல்லியிருக்கிறேன்

அதிலே தவறு என்று சொன்னால், போய்ப் பார்க்கலாம். மாண்புமிகு உறுப்பினர் கேட்ட மற்ற கேள்விக்கு, தனிக் கேள்வி கேட்டால், விவரங்கள் சேகரித்து தரப்படும்.

தமிழகத்தில் முந்திரி உற்பத்தி.

558—(*வினா எண் 2426)—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் முந்திரி உற்பத்திப் பெருக்கத்திற்காக 1983–84, 1984–85 ஆம் ஆண்டுகளில் செலவிடப்பட்ட நிதி எவ்வளவு?

(ஆ) வருடத்துக்கு சராசரி முந்திரிக்கொட்டை உற்பத்தி எவ்வளவு?

(இ) அரசு மூலம் விற்பனையில் லாபம் எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) தமிழகத்தில் முந்திரி உற்பத்திப் பெருக்கத்திற்காக 1983–84 ஆம் ஆண்டில் ரூ. 12.29 இலட்சமும், 1984–85 ஆம் ஆண்டில் ரூ. 14.19 இலட்சமும் தோட்டக்கலைத் துறையால் செலவிடப்பட்டது.

(ஆ) தமிழ்நாட்டில் ஆண்டு சராசரி முந்திரிக்கொட்டை (பதப்படுத்தாதது) உற்பத்தி ஏறத் தாழ 8,400 மெட்ரிக் டன் ஆகும்.

(இ) அரசு மூலம் முந்திரி விற்பனை ஏதும் செய்யப்படுவதில்லை ஆகையால் இக்கேள்வி எழவில்லை.

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு மத்திய அரசு எவ்வளவு உதவித் தொகை அளித்துள்ளது? முந்திரி விலை தமிழகத்தில் அதிகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. அதன் விலையைக் கட்டுப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காகும் செலவை மத்திய, மாநில அரசுகள் சமமாக ஏற்றுக் கொள்கின்றன. முந்திரி விலையைப் பொறுத்த வரையில் நாம் கட்டுப்படுத்த இயலாது.

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, முந்திரி உற்பத்தியைப் பெருக்குவதற்கு மாவட்டந்தோறும், மாடல் பண்ணை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?